Starting time 12.07 P.M.

# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No.194/2004

Deposition of **D.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A.Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 02.09.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : நடேசன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :** நான் தைலப்ப கவுண்டரின் எத்தனாவது மகன் என்றால், 2 வது மகன். எனது பாட்டனார் பெயர் இளையப்ப கவுண்டர் என்றால், ஆமாம். எனது தகப்பனாரின் இளைய சகோதரர் பெயர் ராமசாமி கவுண்டர் என்றால், ஆமாம். அவரது வாரிசுகள் தான் வாதிகள் என்றால், ஆமாம். எனது பாட்டனாருக்கு மொத்தம் எத்தனை ஏக் நிலம் பூர்விகமாக பாத்தியப்பட்டது என்றால், துலுக்கனூர் கிராமத்தில் புல எண். 195-ல் 7 ஏக். 60 செண்ட் நிலம்.

2. தைலப்ப கவுண்டருக்கும் ராமசாமிக்கும் எப்போது பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால், 1950. எனது பாட்டனார் எப்போது இறந்தார் என்றால், 1963. எனது பாட்டி அத்தாயி எப்போது இறந்தார் என்றால், என் தாத்தா இறந்து 6 மாதத்திலேயே இறந்துவிட்டார். வா.சா.ஆ.1 ல் யார் யாருக்கு எவ்வளவு ஏக் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால், இளையப்ப கவுண்டருக்கு 2 ஏக் நிலம், தைலப்ப கவுண்டருக்கு 3 ஏக். ராமசாமிக்கு 2 ஏக். 60 செண்ட் நிலம் ஒதுக்கப்பட்டது.

3. வா.சா.ஆ.1ல் 1, 2 லக்கமிட்டவர்கள் என்று யாரை குறிக்கிறது என்றால், எனது பாட்டனார் இளையப்ப கவுண்டனர் மற்றும் என் தகப்பனார் தைலப்ப கவுண்டதைத்தான் குறிக்கிறது என்றால், ஆமாம். எனது பாகப்பிரிவினை பத்திரத்தில் ரூ.1200 கடன் எனது பாட்டனாருக்கும், எனது சித்தப்பாவிற்கும் ஒதுக்கப்பட்டது என்றால், ஆமாம். அதேபோல என் தகப்பனார் என் பாட்டனாருக்கும், என் சித்தப்பாவிற்கும் தலா ரூ. 125 வீதம் கொடுக்கவேண்டும் எழுதப்பட்டுள்ளது என்றால், ஆமாம்.

4. என் பாட்டனாக்கு ஏ அட்டவணையில் ஒதுக்கப்பட்ட சொத்தை வைத்து ஓட்டி யோ, குத்தகைக்கு வைத்தோ அவரும், அவரது மனைவியோ சாப்பிட்டுக் கொள்ளவேண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம். என் பாட்டனாருக்கு பிரிந்த சொத்திற்கு தெற்கில் உள்ள சொத்து என் சித்தப்பாவிற்கு ஒதுக்கப்பட்டது என்றால், என் பாட்டனார் மற்றும் என் தகப்பனாரின் நிலங்களுக்கு இடையில் ராமசாமி கவுண்டருக்கு நிலங்கள் ஒதுக்கப்பட்டது.

5. என் தாத்தா நிலத்திற்கும் என் தகப்பனார் நிலத்திற்கும் இடையே அத்து எதுவும் இல்லை என்றால், என் தாத்தா கல்கட்டு கட்டியுள்ளார். இளையப்ப கவுண்டரின் நிலத்திற்கும், தைலப்ப கவுண்டரின் நிலத்திற்கும் இடையில் வரப்போ, தடபாத்தியமோ இருக்கிறதா என்றால், இருக்கிறது. நான் கூறுவது தவறு என்றாலும், என் தகப்பனார் நிலத்திற்கும் என் பாட்டனார் நிலத்திற்கும் இடையே ராமசாமி நிலம் தான் உள்ளது என்றால், ஆமாம்.

6. 1950-ல் பாகம் பிரித்த போது என் பாட்டனார் நிலத்திற்கும், என் தகப்பனார் நிலத்திற்கும் இடையே எந்த அத்தும் இல்லை என்றால், இருந்தது தென்னை மரம் வைத்து கல்கட்டு கட்டப்பட்டிருந்தது. 1962-ல் என் தாத்தா பாட்டி இருவரும் உயிருடன் இருந்த போதே 1950-ல் என் பாட்டனாருக்கு பிரிந்த ஏ அட்டவணை சொத்தை பி.வா.சா.ஆ-1ல் என் தகப்பனார் வாங்கிவிட்டார் என்றால், ஆமாம். அது என் பாட்டனார் இறப்பதற்கு 6 மாதத்திற்கு முன்பு ஏற்படுத்த பட்ட கிரயம் என்றால், இல்லை, 1 வருடம்

இருக்கும்.

7. என் தகப்பனார் வயோதிகத்தினால் இயலாமையுடன் இருந்தபோது அதை பயன்படுத்தி என் தகப்பனார் எழுதி வாங்கிவிட்டார் என்றால், சரியல்ல, என் தாத்தாவிற்கு கடனாகிவிட்டதால் அவர் வேறு நபர்களுக்கு விற்பதாக கூறினார், அதனால் என் தகப்பனார் நிலத்தை அவரே வாங்கிவிட்டார். அவ்வாறு வாங்கியது 1950 பாகப்பிரிவினை பத்திர ஷரத்துகளுக்கு முரணானது என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1-ல் என் தாத்தாவிற்கு பிரிந்த ஏ அட்டவணை சொத்தை அவரும், அவரது மனைவியும் ஆயுள் காலம் முழுவதும் எந்தவித பாராதீனமும் செய்யக்கூடாது என்று உள்ளது என்றால், இல்லை.

8. 1962-ல் என் சித்தப்பாவிற்கு புத்தி சுவாதீனம் இல்லாமல் இருந்தபோது என் தகப்பனார், என் தாத்தாவிடமிருந்து சொத்தை எழுதி வாங்கி கொண்டார் என்றால், சரியல்ல. வாதியின் தாயார் செல்லம்மாள் 1982-ல் கிணறு பாகம் 24 செண்டில் பேர் பாதி என்னிடமிருந்து கிரயம் பெற்றார் என்றால், கிணறு பாகமே 6 செண்டுதான் அந்த பத்திரம் தவறாக எழுதப்பட்டுள்ளது. அன்றிலிருந்து இன்றுவரை 6 செண்டுதான் அனுபவித்து வருகிறார்கள்.

9. அந்த பத்திரத்தில் எனக்கும் என் அண்ணனுக்கும் பிதுராஜ்தமாகவும், என் தகப்பனாருக்கு சுயார்ஜிதமாகவும் பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம். அந்த கிணற்றில் தண்ணீர் எடுக்கும் பாதி உரிமையைத்தான் எழுதிக் கொடுத்துள்ளோம் என்றால், ஆமாம், 6 செண்ட். அதன் புல எண். 195/1 ஏ என்றால், ஆமாம். அந்த ப்திரத்தில் 1962-ல் என் தகப்பனார் என் பாட்டனாரிடம் இருந்து பெற்ற கிரயம் பற்றி எழுதப்பட்டுள்ளதா என்றால், எழுதப்பட்டுள்ளது.

10. அவ்வாறு அந்த பத்திரத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றாலும், ராமசாமி கவுண்டர் புத்திசுவாதீனம் இல்லாதபோது என் தாத்தாவை அழைத்து சென்று எழுதி வாங்கிய பத்திரம் என்பதால் தான் குறிப்பிடப்படவில்லை என்றால், சரியல்ல. என்

தாத்தாவிற்கு ஏற்பட்ட கடனுக்காக வேறு நபர்களுக்கு விற்க முற்பட்ட போது நாங்கள் வாங்கினோம். பி.வா.சா.ஆ.1-ல் 1962-ல் என் தகப்பனார் என் பாட்டனாரிடம் இருந்து பெற்ற கிரய ஆவணத்தில் என் பாட்டனாரின் கடன் குறித்து எழுதப்பட்டுள்ளதா என்றால், இல்லை.

11. பி.வா.சா.ஆ.1-ல் இந்த சொத்தின் மீது ஏதேனும் வில்லங்கம் ஏற்பட்டால் என்னுடைய சொந்த பொறுப்பில் தீர்த்துக் கொடுப்பதும் தவிர அதில் உமக்கு ஏற்படும் சகல கஷ்ட நஷ்டங்களுக்கும் செலவுகளுக்கும், நானும், என் வாரிசுகளும், இதர சொத்துக்களும் கட்டுப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ராமசாமி கவுண்டர் வாரிசு பிறப்பதற்கு முன்பாக எழுதி வாங்கிய பத்திரம்.

12. இளையப்ப கவுண்டருக்கு அந்த சமயத்தில் வேறு சொத்துக்கள் இருந்ததா என்றால், இல்லை. எனது பிரமாண பத்திரிக்கையில் 2-ஆம் பக்கத்தில் 3- வது பத்தியில் 16.02.1950 முதல் எனது பாட்டனாருக்கு கூஸ்திதியில் ஒதுக்கப்பட்ட நிலமான 2 ஏக் 10 செண்ட் நிலத்தில் அவர் விருப்பம் போல் தொடர்ச்சியாக ஆட்சேபனை எதுவுமின்றி அமைதியாக எனது சித்தப்பா ராமசாமி கவுண்டர் மற்றும் அவரது வாரிசுகளுக்கு எதிராக அவர்களுக்கு தெரிந்தே 03.03.1962-ஆம் தேதி வரை அனுபவித்து வந்து அதன்படி வாதிகளுக்கு எதிராக புல எண். 195/1 ஏ-ல் எதிரிடை பாத்தியம் பெற்றவரானார் என்று கூறியிருப்பது சரியானதா என்றால், சரிதான்.

13. 20 வருடமாக என் தகப்பனார் தான் ஓட்டி வந்தார், வாதிகள் யாரும் ஆட்சேபனை செய்யவில்லை. பத்தி 4-ல் எனது தாத்தா இளையப்ப கவுண்டரினால் சொத்தினை பராமரிக்க இயலாமல் போனதால் அவரால் அதில் வருமானம் ஏதும் ஈட்ட இயலவில்ல. அவரை எனது தந்தை கைலாப்ப கவுண்டர் தான் பராமரித்து வந்தார். அதனால் கடந்த 03.03.1962 அன்று எனது பாட்டனார் இளையப்ப கவுண்டர், எனது தந்தைக்கு தாவா 2-ம் அயிட்ட சொத்தான புல எண். 195/1 ஏ-ல் கண்ட நிலங்களையும் அதில் உள்ள ½ பங்கு கிணற்றையும், கிரய ஆவண எண். 831/1962-ன் படி சரியான பிரதிபிரோயஜனத்திற்கு

கிரயம் செய்து கொடுத்தார் என்று கூறியுள்ளேன் என்றால், ஆமாம்.

14. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 5ல் புல எண். 195/1 ஏ-ல் தென்கிழக்கு மூலையில் ஒரு கிணற்றையும், வடமேற்கு மூலையில் ஒரு கிணற்றை வெட்டினார் என்று கூறியுள்ளேன் என்றால், கூறியுள்ளேன். நீதிமன்ற ஆணையரை அழைத்து சென்று கிணறுகளை காண்ப்பித்தேனா என்றால், இல்லை, ஏனென்றால், பத்திரத்திலேயே காட்டப்பட்டுள்ளது. அவ்வாறு எனது அப்பா கிணறே வெட்டவில்லை என்றால், சரியல்ல.

15. 1950 பாக்பிரிவினை பத்திரத்தில் எனது பாட்டனார் மற்றும் பாட்டியும் அவர்களுக்கு பிரிந்த சொத்தை அவர்களது ஆயுட்காலம் வரை அனுபவித்து வரவேண்டுமே தவிர எந்த வித பராதீனமும் செய்யக்கூடாது என எழுதியுள்ளது என்றாலும், அதனால் எனது பாட்டனாரும், பாட்டியும் இறந்தபிறகு கூட்டுகுடும்ப சொத்தாகிறது என்றால், சரியல்ல. என் தாத்தா மற்றும் பாட்டியை மருத்துவ செலவு, சாப்பாட்டு செலவு எல்லா் செய்து பராமரித்ததே என் தகப்பனார் தான். வேறு யாரும் பராமரிக்கவில்லை.

16. எனது பிரமாண வாக்குமூலத்தில் 7-ஆம் பத்தியில் என் பாட்டனாரின் பங்கு சொத்தில் வாதிகளுக்கும் உரிமையிருப்பதாக நான் ஒப்புக் கொண்டுள்ளேன் என்றால், இல்லை. 15.12.2016 நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் பதிலுரையில் வாதிக்கு பாத்தியப்பட்ட ½ பங்கு நிலத்தில் நாங்கள் சுவாதீனத்தில் இருந்து வருகிறோம் என்று கூறியுள்ளேன் என்றால், 6 செண்ட் கிணறு போக மீதி சொத்தில் நாங்கள் தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறோம்.

17. அந்த கூடுதல் பதிலுரை மனுவை இந்நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது என்றால், சரிதான். பி.வா.சா.ஆ-1 ஆவணத்தை அமலுக்கு கொண்டுவராததால் தான் எதிரிடை அனுபவம் கேட்கிறேன் என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ-1-ஐ அமலுக்கு கொண்டுவாததால் என் பாட்டனாரின் பங்கு சொத்து அவரும், அவரது மனைவியும் இறந்தபிறகு கூட்டுக்குடும்ப சொத்தாகிவிட்டது என்றால், சரியல்ல. கூட்டுக்குடும்ப

சொத்து என்பதால் என்னுடைய அனுபவத்தின் பேரில் எதிரிடை அனுபவம் கோர இயலாது என்றால், சரியல்ல.

18. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ-2 அடங்கலானது கிராம நிர்வாக அதிகாரியால் வழங்கப்பட்டுள்ளதால் அது ஏற்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. என்னுடைய பாட்டனார் 1950-லேயே தனது இளைய மகன் ராமசாமிக்கு புத்தி சுவாதீனம் இல்லாததால் அவருக்கு ஏதேனும் செய்ய வேண்டும் என்பதால் தான் ராமசாதியின் பாகத்திற்கு அருகிலேயே தனது பாகத்தை வைத்துக் கொண்டார் என்றால், சரியல்ல, 3 பாகம் பிரித்த பிறகு ராமசாமிதான் முதலில் தனது பாகத்தை எடுத்துக் கொண்டார், இளைய மகன் என்பதால் அவர் முதலில் எடுத்துக் கொண்டார்.

19. 1950-ல் என் பாட்டனாருக்கும், என் தகப்பனாருக்கும் தகராறு ஏற்பட்டதால் தான் பாகப்பிரிவினை ஏற்பட்டதாக பாகப்பிரிவினை பத்திரத்திலேயே கண்டுள்ளது என்றால், சரியல்ல, மகன்களுக்கு திருமணமாகி குழந்தைகள் பிறந்துவிட்டதால் என் தாத்தாவே தான் பாகப்பிரிவினை செய்து வைத்தார், எங்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை. மேற்படி சங்கதி குறித்து பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான்.

20. நான் கூறுவது தவறு என்றாலும், 1950-ல் என் தகப்பனாருக்கும், என் பாட்டனாருக்கும் பிரச்சனை ஏற்பட்டதால் தான் பாகப்பிரிவினை பத்திரமே எழுதப்பட்டது என்றால், சரியல்ல. எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது உண்மைதான் என்றாலும், அவ்வாறு இருக்கும் போது 1962-ல் என் பாட்டனார், என் தகப்பனாருக்கு கிரயமே ஏற்படுத்திக் கொடுத்திருக்க மாட்டார் என்றாலும், சரியல்ல.

21. பி.வா.சா.ஆ-8 கந்தாய ரசீதுகள் அனைத்தும் வழக்கிற்கு பின்னிட்டவைதான் என்றால், சரிதான். புல எண். 195/1 ஏ-ஐ ஒட்டி அரசு புறம்போக்கு நிலமான 1 ஏக். 55 செண்ட் அரசு புறம்போக்கு நிலத்தை எனது தாத்தா அனுபவித்து வந்தாரா என்றால், இல்லை, என் தகப்பனார் பெயருக்கு டி நமுனா வழங்கப்பட்டது. அதன் புல எண் என்ன

என்றால், 183 சி, 97 செண்ட்.

22. நான் கூறுவது தவறு என்றாலும், அதன் புல எண். 182/3 சி என்றாலும், 1 ஏக்.84 செண்ட் நிலத்தை எனது பாட்டனார் இளையப்ப கவுண்டர் காலத்திலிருந்தே அனுபவித்து வந்தார் என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.9-ல் தாவா சொத்திற்கும் 182/3 சிக்கும் கூட்டு பட்டதான் வழங்கப்பட்டுள்ளது என்றால், ஆரம்பத்தில் இருந்தே அவ்வாறுதான் உள்ளது. அது கூட்டுக்குடும்ப சொத்து என்பதால் தான் வட்டாட்சியர் பிரித்துக் கொடுக்கவில்லை என்றால், பிரித்துக் கொடுக்கும்படி கேட்டால் வாதி உடனே ஆட்சேபனை செய்கிறார்.

23. 11.07.1994-ல் எங்களது குடும்பத்திற்குள் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால், ஆமாம். அந்த பத்திரத்தில் ஒரு பகுதி சொத்து பூர்விக சொத்திலிருந்து வந்த வருமானத்தை கொண்டும் மற்றும் அனைவரின் உழைப்பால் வந்த பொது வருமானத்தை கொண்டும், குடும்ப கர்த்தா என்ற முறையில் கைலப்ப கவுண்டர் பெயரில் 03.03.1962-ஆம் தேதியில் ஏற்பட்ட கிரய பத்திரத்தின் மூலம் பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், அதுதான் பி.வா.சா.ஆ-7 என்றாலும், சரிதான்.

24. எதிரிடை அனுபவத்தின் மூலம் என் பாட்டனார் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் எதுவும் நான் கேட்கவில்லை என்றால், கேட்கவில்லை. 1962-ல் எனக்கு என்ன வயது இருக்கும் என்றால், 15 வயது இருக்கும். 1962-ஆண்டு பத்திரத்தில் என் தகப்பனார் என் பாட்டனாரை ஏமாற்றி கையொப்பம் பெற்றுவிட்டார் என்றால், சரியல்ல. ஏமாற்றி பெற்றதால் தான் சொத்தை எப்படியாவது பெறவேண்டும் என்பதற்காக எதிரிடை அனுபவத்தின் உரிமை கோருகிறேன் என்றால், சரியல்ல.

25. உண்மையிலேயே கிரயம் பெற்றிருந்தால் 1962 பத்திரத்தின் அடிப்படையில் விளம்புகை பரிகாரம் கேட்டிருப்பேன் என்றால், சரியல்ல, கிரயம் பெற்றது உண்மைதான். பாகப்பிரிவினை பத்திரத்தில் என் தாத்தா பாட்டிக்கு ஒதுக்கப்பட்ட சொத்தானது அவர்களது ஆயுளுக்கு பின்னிட்டு பொது குடும்ப சொத்தானது என்றால், சரியல்ல. பொது குடும்ப சொத்து என்றால், எதற்காக வாதி கிரயம் பெற்ற 20 வருடம் கழித்து

கிணற்றை பாதி கிரயம் வாங்குகிறார்.

26. 1962 பத்திரம் உண்மையான பத்திரமாக இருந்தால் 1982-ல் செல்லம்மாளுக்கு எழுதிக் கொடுத்த பத்திரத்தில் அதுகுறித்து சொல்லியிருப்பேன் என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.7 லும் பி.வா.சா.ஆ.1 குறித்து எதுவும் சொல்லப்படவில்லை என்றால், சரியல்ல. இளையப்ப கவுண்டருக்கு பாகப்பிரிவினை பத்திரத்தில் வந்த சொத்தில் வாதிகளுக்கும் பாதி பங்கு உண்டு என்றால், சரியல்ல.

27. இளையப்ப கவுண்டர் புல எண். 195/1 ஏ-ஐ ஒட்டி அனுபவித்து வந்த 1.84 செண்ட் நிலத்திலும் வாதிகளுக்கு ½ பங்கு சொத்து உண்டு என்றால், சரியல்ல, என் தகப்பனாருக்கு டி கார்டு மூலம் வந்த சொத்து. வாதி கோரியவாறு தீர்ப்பாக வேண்டுமென்றால், சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

பிரதிவாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 01.15 P.M.

**ஒப்பம்/- என்.திலகேஸ்வரி**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**